# October 13, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. தமிழகத்தின் முழுநேர ஆளுநராக ராஜேந்திர விஸ்வநாத் ஆர்லேகர் நியமிக்கப்பட்டுள்ளார்.

(i) தமிழக ஆளுநராக இருந்த ஆர். என்.ரவி மேற்கு வங்க ஆளுநராக மார்ச் மாதம் மாற்றப்பட்டார். கேரள ஆளுநராக இருந்த ஆர். வி.ஆர்லேகருக்கு தமிழகத்தின் ஆளுநராகக் கூடுதல் பொறுப்பு அளிக்கப்பட்டது. இந்நிலையில், அவரை தமிழகத்தின் முழுநேர ஆளுநராக குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு நியமித்துள்ளார்.

(ii) சிக்கிம் ஆளுநராக இருந்த ஓம் பிரகாஷ் மாத்தூர் கேரள ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார். ஜார்க்கண்ட் பாஜக மூத்த தலைவர் பிரஜ் மோகன் ராம் ஒடிஸா ஆளுநராகவும், பாஜக முன்னாள் எம்.பி.ஹரியாணாவைச் சேர்ந்த சுதா யாதவ் கர்நாக ஆளுநராகவும், பாஜக முன்னாள் எம்.பி. தால் சிங் பிசேன் உத்தரகண்ட் ஆளுநராகவும், பாஜக தேசிய பொதுச்செயலர் துஷ்யந்த் கௌதம் சிக்கிம் ஆளுநராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்று குடியரசுத் தலைவர் மாளிகையின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. இந்திய எல்லைக்கு சுமார் 80 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள மோங்லா துறைமுகத்தை விரிவுபடுத்தி நவீனமயமாக்குவதற்காக, சீனாவுடன் சுமார் ரூ.3,200 கோடி மதிப்பிலான சலுகைக் கடன் ஒப்பந்தத்தில் வங்கதேசம் கையொப்பமிட்டுள்ளது.

(i) சட்டோகிராம் துறைமுகத்துக்கு அடுத்தபடியாக வங்கதே சத்தின் 2-ஆவது பெரிய துறைமுகமாக விளங்கும் மோங்லாவில், சரக்கு கையாளும் திறன் மற்றும் உள்கட்டமைப்பை மேம்படுத்தும் நோக்கில் இரு புதிய கன்டெய்னர் முனையங்கள் மற்றும் சரக்கு யார்டுகள் அமைக்க இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளது.

(ii) பசூர் நதிக்கரையில் அமைந்துள்ள இந்த மோங்லா துறைமுகப் பகுதியில், கடந்த 2015- ஆம் ஆண்டு இருதரப்பு ஒப்பந்தத்தின்கீழ் இந்தியாவுக்கு ஒதுக்கப்பட்டிருந்த 110 ஏக்கர் அளவிலான சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டத்தை முகமது யூனுஸ் தலைமையிலான இடைக்கால அரசு கடந்த ஆண்டு ரத்து செய்தது.

(iii) இந்தியாவுக்காக ஒதுக்கப்பட்ட பகுதியில் குறிப்பிட்ட காலத்துக்குள் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவில்லை எனக் கூறி திட்டம் ரத்து செய்யப்பட்ட நிலையில், தற்போது சீனாவுடன் இப்புதிய கடன் ஒப்பந்தம் கையொப்பமாகியுள்ளது கூடுதல் கவனத்தைப் பெற்றுள்ளது.

3. ஜெர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரெல், நடப்பாண்டு இறுதியில் ஏடிபி தரவரிசையில் நம்பர் 1 இடத்துக்கு முன்னேறவுள்ளார்.

(i) ஷாங்காய் மாஸ்டர்ஸில் அல்கராஸின் தோல்வியும், நம்பர் 1 இடத்திலிருக்கும்

இத்தாலியின் யானிக் சின்னர் அடுத்தடுத்து போட்டிகளில் பங்கேற்காததும், ஸ்வெரெவின் முன்னேற்றத்துக்கு வழிவகுத்துள்ளது.

(ii) ஒரு டென்னிஸ் காலண்டரை நம்பர் 1 வீரராக நிறைவு செய்யவுள்ள முதல் ஜெர்மனிவீரர் என்ற வரலாற்றுச் சாதனையை ஸ்வெரெவ் படைக்க இருக்கிறார்.

(iii) இதற்கு முன்பு 8 முறை டென்னிஸ் காலண்டரை டாப் 10 இடங்களுக்குள் நிறைவு செய்துள்ள ஸ்வெரெவ், முதல்முறையாக முதலிடத்துக்கு வரவுள்ளார்.

(iv) மேலும், கடந்த 27 ஆண்டுகளில், நம்பர் 1 இடத்துடன் காலண்டரை நிறைவு செய்யும் வயதான வீரராகவும் ஸ்வெரெல் பெருமை பெறுகிறார். இதுவரை அந்தப் பெருமை அமெரிக்காவின் ஆண்ட்ரே அகலி (1999- 29 வயது, 214 நாள்கள்) வசம் இருந்த நிலையில், ஸ்வெரெவ் தற்போது அதை கடந்திருக்கிறார் (2026 - 29 வயது, 217 நாள் கி).

(v) நடப்பாண்டு ஸ்வெரெவுக்கு சிறப்பாக அமைந்தது. பிரெஞ்சு ஓபன், யுஎஸ் ஓபனில் சாம்பியனான ஸ்வெரெவ், ஆஸ்திரேலிய ஓபனிலும், 4 மாஸ்டர்ஸ் போட்டியகளிலும் அரையிறுதி வரை வந்தார். தற்போது ஷாங்காய் மாஸ்டர்ஸில் அவர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இருக்கிறார்.

4. பிம்ஸ்டெக்' கூட்டமைப்பின் முதலாவது உள் துறை அமைச்சர்கள் மாநாடு தில்லியில் செவ்வாய்க்கிழமை (அக்.13) நடைபெறுகிறது.

(i) வங்காள விரிகுடா எல்லையையொட்டிய நாடுகள் மற்றும் அண்டை நாடுகளிடையே பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட பிம்ஸ்டெக் கூட்டமைப்பில் இந்தியா, இலங்கை, வங்கதேசம், மியான்மர், நேபாளம், பூடான் மற்றும் தாய்லாந்து ஆகிய 7 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன.

(ii) வங்கதேச அமைச்சர் புறக்கணிப்பு:

- கடந்த 2025, ஏப்ரல் முதல் பிம்ஸ்டெக் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை வங்கதேசம் வகித்தும் வரும் நிலையில், தில்லியில் நடைபெறும் உள் துறை அமைச்சர்கள் மாநாட்டை அந்நாட்டின் உள்துறை அமைச்சர் சலாஹுதின் அகமத் புறக்கணித்துள்ளார். அவருக்குப் பதிலாக வங்கதேச உள்துறை விவகாரங்கள் மூத்த செயலர் மன்சூர் மோர்ஷெத் சௌதரி தலைமையிலான பிரதிநிதிகள் குழு பங்கேற்கவுள்ளது.
- மாணவர் போராட்டத்துக்குப்பின் இந்தியாவில் வங்கதேச முன்னாள் பிரதமர் ஷேக் ஹசீனா தஞ்சமடைந்துள்ளதையடுத்து இந்தியா-வங்கதேசம் இடையான இரு தரப்பு உறவில் விரிசல் ஏற்பட்டுள்ளது.
- பிம்ஸ்டெக் கூட்டமைப்புக்கு தலைமை வகிப்பதால் கடந்த மாதம் இந்தியாவில் நடைபெற்ற பிரிக்ஸ் உச்சிமாநாட்டில் பங்கேற்க விடுக்கப்பட்ட அழைப்பையும் வங்கதேச பிரதமர் தாரீக் ரஹ்மான் புறக்கணித்தது குறிப்பிடத்தக்கது.

5. முற்றிலும் இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட 3-ஆவது நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க் கப்பல் கடற்படையில் சேர்க்கப்பட்டது.

(i) இந்திய கடற்படையில் ஏற்கெனவே இரு நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க் கப்பல்கள் சேர்க்கப்பட்டன. இந்நிலையில், கொச்சி கப்பல் கட்டும் நிறுவனத்தால் கட்டப்பட்ட ஆழ்கடல் அல்லாத பகுதிகளில் செயல்படும் நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க் கப்பலான ஐஎன்எஸ் மாங்க்ரோல், மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இந்திய கடற்படையில் சேர்க்கப்பட்டது.

(ii) நடுக்கடலில் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுவதுடன், கடற்படை விமானம், ஹெலிகாப்டர்கள், பிற போர்க் கப்பல்களுடன் இணைந்து கடலில் ரகசியமாக வரும் எதிரி நீர்மூழ்கி கப்பல்களைக் கண்டறிவது, அவற்றால் எழும் சவால்களை முறியடிப்பது போன்ற பணிகளில் ஐஎன்எஸ் மாங்க்ரோல் கப்பல் ஈடுபடும்.

(iii) குஜராத்தின் ஜுனாகத் மாவட்டத்தில் உள்ள துறைமுக நகரத்தின் பெயர் மாங்க்ரோல் ஆகும். அந்தப் பெயரே, இக்கப்பலுக்கு வைக்கப்பட்டுள்ளது.

(iv) மாங்க்ரோலில் கடலுக்குள் உள்ள எதிரி இலக்குகளை அழிக்கச் செலுத்தப்படும் டோர்பீடோ ஏவுகணை, ராக்கெட் லாஞ்சர் உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன. இக்கப்பலுடன் சேர்த்து, இந்தாண்டில் கடற்படையில் 10 புதிய கப்பல்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் 8 கப்பல்கள், இந்தாண்டுக்குள் கடற்படையில் சேர்க்கப்படவுள்ளன.

6. இந்திய தலைமை நீதிபதி அலுவலகம் ஒவ்வொரு நிமிஷமும் அக்னி பரீட்சையை எதிர்கொள்கிறது' என தேசிய மனித உரிமைகள் ஆணைய (என்ஹெச்ஆர்சி) தலைவரும் ஓய்வு பெற்ற நீதிபதி யுமான வெ.ராமசுப்பிரமணியனும், நாட்டுமக்களின் நம்பிக்கை புகலிடமாக 'என்ஹெச்ஆர்சி திகழ்கிறது' என உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியும் ஒரே மேடையில் மற்றொருவர் எதிர்கொள்ளும் சவாலான சூழல்களை பகிர்ந்துப் கொண்டனர்.

(i) தில்லியில் உள்ள விஞ்ஞான் பவனில் தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் 33-ஆவது நிறுவன நாள் விழா திங்கள் கிழமை கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சூர்ய காந்த் கலந்து கொண்டார்.

7. அமெரிக்காவை சேர்ந்த பொருளாதார நிபுணர்கள் ராபர்ட் இ ஹால் (83), மைக்கேல் உட்போர்ட் (71) ஆகியோருக்கு 2026- ஆம் ஆண்டின் பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

(i) பேரியல் பொருளாதார ஸ்திரப்படுத்தலில் நுண்ணியல் பொருளாதார அடித்தளங்கள் குறித்த ஆய்வுக்காக ராபர்ட் இ ஹால்வும் இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

(ii) அறிவியல், இயற்பியல், வேதியியல், மருத்துவம், அமைதி, பொருளாதாரம் ஆகிய துறைகளில் சிறந்து விளங்குவோருக்கு ஆண்டுதோறும் நோபல் பரிசு

வழங்கப்பட்டு வருகிறது. இதில் அறிவியல், இயற்பியல், வேதியியல், மருத்துவம், அமைதி ஆகியவற்றுக்கான 2026- ஆம் ஆண்டு நோபல் பரிசு ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுவிட்டது.

(iii) இந்நிலையில், ஸ்டாக்ஹோமில் உள்ள ராயல் ஸ்வீடிஷ் அறிவியல் அகாதெமி, பொருளாதாரத்துக்கான நோபல் பரிசை அறிவித்தது. அதில் அமெரிக்காவைச் சேர்ந்த பொருளாதார நிபுணர்கள் ராபர்ட் இ ஹால், மைக்கேல் உட்போர்ட் ஆகியோருக்கு பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டது. ராபர்ட் இ ஹால், கலிபோர்னியா மாகாணத்தின் ஸ்டான்போர்டு பல்கலைக்கழகத்திலும், உட்போர்ட் நியூயார்க் நகரில் உள்ள கொலம்பியா பல்கலைக்கழகத்திலும் பணி புரிகின்றனர்.

(iv) உலகெங்கிலும் உள்ள பல்வேறு நாடுகளின் அரசுகளாலும், மத்திய வங்கிகளாலும் பயன்படுத்தப்படும் பொருளாதார கொள்கைகளுக்கு, இருவரின் பணிகளும் நிலையான கோட்பாட்டு அடித்தளத்தை வழங்கியுள்ளதாகவும், இவற்றின் மூலம் எரிசக்தி நெருக்கடிகள், குடும்பங்களின் நுகர்வில் ஏற்படும் திடீர் மாற்றங்கள் போன்றவற்றால் பொருளாதாரத்தில் ஏற்படும் அதிர்வுகளை எதிர்கொள்ளும் திறன் நமக்கு வந்திருப்பதாக பொருளாதார அறிவியலுக்கான நோபல் பரிசை தேர்வு செய்யும் குழுவின் தலைவரான ஜான் ஹேஸ்லர் தெரிவித்துள்ளார்.

(v) பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு, பொதுவாக பொருளாதார அறிவியலுக்கான ஸ்வீடன் வங்கி பரிசு என அறியப்படுகிறது. டைனமைட்டை கண்டுபிடித்த 19-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஸ்வீடன் தொழிலதிபரும், வேதியியல் நிபுணருமான ஆல்பிரெட் நோபல் நினைவாக இப்பரிசு வழங்கப்படுகிறது.

(vi) கடந்த 1896-ஆம் ஆண்டு டிசம்பர் 10-ஆம் தேதி ஆல்பிரெட் நோபல் உயிரிழந்தார். அவரது நினைவு தினமான டிசம்பர் 10-ஆம் தேதியன்று நோபல் பரிசுகளுக்கு தேர்வு செய்யப்பட்ட அனைவருக்கும் அந்த பரிசு வழங்கப்படும். அதன்படி வரும் டிசம்பர் 10-ஆம் தேதி அந்த நோபல் பரிசுகள் வழங்கப்படும்.

(vii) அறிவியல், இயற்பியல், வேதியியல், மருத்துவம், அமைதி ஆகியவற்றுக்கான நோபல் விருது வழங்கும் முறையை ஆல்பிரெட் நோபல் உருவாக்கினார். அதேநேரத்தில், பொருளாதாரத்துக்கான நோபல் பரிசை ஆல்பிரெட் நோபல் நினைவாக ஸ்வீடன் மத்திய வங்கி உருவாக்கியது குறிப்பிடத்தக்கது.

8. மழைநீர் சேகரிப்பின் முக்கியத்துவம்

(i) தென்மேற்குப் பருவமழைப் பற்றாக்குறை மற்றும் தேசிய அளவிலான தாக்கம்

- இந்த ஆண்டு தென்மேற்குப் பருவமழைக் காலத்தில் தமிழ்நாட்டில் இயல்பை விட 20% குறைவாக மழை பெய்துள்ளது. கடந்த 6 ஆண்டுகளில் இதுவே மிகக் குறைந்த மழைப்பொழிவாகும்.
- எல் நினோ (El Niño) நிகழ்வின் தாக்கத்தால், இந்தியா முழுவதும் தென்மேற்குப்

பருவமழைப் பொழிவு இயல்பை விட 13% குறைந்துள்ளது. இது கடந்த 10 ஆண்டுகளின் சராசரியைவிடக் குறைவாக இருப்பதாக மத்திய நீர் ஆணையம் தெரிவித்துள்ளது.

(ii) நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் குறைதல் மற்றும் சென்னையின் குடிநீர் நெருக்கடி

- அதிகரித்து வரும் மக்கள்தொகையின் குடிநீர்த் தேவை, தொழிற்சாலைகளின் நீர்ப் பயன்பாடு, நீர்நிலைகளில் ஆக்கிரமிப்புகளால் நீர்த்தேக்கக் கொள்ளளவு குறைதல், மழைநீர் சேகரிப்பில் போதிய ஆர்வமின்மை மற்றும் கடுமையான வெப்பத்தால் ஏற்படும் ஆவியாதல் ஆகிய காரணங்களால் சென்னைக்குக் குடிநீர் வழங்கும் முக்கிய நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வருகிறது.
- சென்னைக்குக் குடிநீர் வழங்கும் 6 முக்கிய நீர்த்தேக்கங்களான செம்பரம்பாக்கம், பூண்டி, புழல், வீராணம், சோழவரம் மற்றும் தேர்வாய் கண்டிகை ஆகியவற்றின் மொத்த நீர்த்தேக்கக் கொள்ளளவு 13.21 டிஎம்சி (TMC) ஆகும்.
- தற்போது இந்நீர்த்தேக்கங்களில் மொத்தம் 5 டிஎம்சி நீர் மட்டுமே உள்ளது. கடந்த ஆண்டு இதே காலகட்டத்தில் 9.1 டிஎம்சி நீர் இருந்தது.

(iii) மாநிலம் முழுவதும் அணைகளின் நீர் இருப்பு மற்றும் தண்ணீர்ப் பற்றாக்குறை அபாயம்

- தமிழ்நாட்டில் உள்ள 90 அணைகளின் மொத்த நீர்த்தேக்கக் கொள்ளளவு 224.343 டிஎம்சி ஆகும். ஆனால், தற்போது அவற்றில் 74.412 டிஎம்சி நீர் மட்டுமே உள்ளது.
- 63 அணைகளில் மொத்தக் கொள்ளளவில் 25%-க்கும் குறைவான நீரே உள்ளது. மேலும், 17 அணைகளில் 26% முதல் 50% வரையிலான நீர் இருப்பு உள்ளது.
- மழைப்பொழிவு குறைவாக இருப்பதால், வடகிழக்குப் பருவமழை தாமதமானாலோ அல்லது போதிய அளவு பெய்யாவிட்டாலோ, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி உள்ளிட்ட முக்கிய நகரங்கள் முதல் கிராமப்புறங்கள் வரை விவசாயம், தொழில்துறை மற்றும் குடிநீர்த் தேவைகளுக்குக் கடுமையான தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளது.
- கர்நாடகத்தின் காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழைப்பொழிவு குறைந்ததால், மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு வெகுவாகக் குறைந்துள்ளது. இதனால், நாகப்பட்டினம் போன்ற காவிரிப் பாசனத்தின் கடைமடைப் பகுதிகளுக்குத் தண்ணீர் செல்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக சம்பா நெல் சாகுபடியும் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

(iv) நிலத்தடி நீர் குறைதல் மற்றும் உள்கட்டமைப்புச் சவால்கள்

- சில பகுதிகளில் குடிநீர்ப் பற்றாக்குறையால் பொதுமக்கள் காலிக் குடங்களுடன் சாலைகளில் போராட்டம் நடத்துகின்றனர். அதேவேளையில், வேறு சில பகுதிகளில் குழாய்களில் ஏற்படும் கசிவு மற்றும் உடைப்புகளால்

சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வீணாகிறது.

- விவசாயத்திற்கான ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் வீட்டு உபயோகம், தொழிற்சாலைகளுக்கான அதிகப்படியான நீர் எடுப்பு ஆகியவற்றால் அரியலூர், திண்டுக்கல், தூத்துக்குடி, மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி உள்ளிட்ட 14 மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது.

நிலத்தடி நீர் செறிவூட்டலுக்கான தடைகள்:

- கிராமப்புறச் சாலைகள் மற்றும் தெருக்களில் கான்கிரீட் தளங்கள் அமைக்கப்படுவதால், மழைநீர் நிலத்திற்குள் ஊடுருவுவது தடுக்கப்படுகிறது. இதனால் நிலத்தடி நீர் செறிவூட்டல் பாதிக்கப்படுகிறது.

புறக்கணிக்கப்படும் பாரம்பரியக் கிணறுகள்:

- சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு வரை, கிராமங்களில் பொதுக் கிணறுகள் மக்களின் அன்றாட நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்தன.
- பின்னர் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து, ஆயிரக்கணக்கான பொதுக் கிணறுகள் கைவிடப்பட்டன. அவற்றில் பல தூர்ந்து போயின அல்லது குப்பைக் கொட்டும் இடங்களாக மாறின.

(v) நீர்நிலைகளின் எண்ணிக்கை அதிகரிப்பு மற்றும் சர்வதேச முன்னுதாரணங்கள்

- மத்திய ஜல் சக்தி அமைச்சகத்தின் தகவலின்படி, நீர்நிலைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதில் மகாராஷ்டிரம் இந்திய அளவில் முதலிடத்தில் உள்ளது.
- தமிழ்நாட்டில் நீர்நிலைகளின் எண்ணிக்கை 1,08,957-லிருந்து 1,10,228-ஆக அதிகரித்துள்ளது. இது வெறும் 3.1% வளர்ச்சியாகும்.

சர்வதேச அளவில் பின்பற்றப்படும் மழைநீர் சேகரிப்பு முறைகள்:

- ஜெர்மனி: மழைநீரை கழிவுநீர்க் கால்வாய்களில் வெளியேற்றும் கட்டட உரிமையாளர்களிடம் மழைநீர் வரி வசூலிக்கப்படுகிறது. முறையான மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை நிறுவும் கட்டடங்களுக்கு கணிசமான வரிச் சலுகைகளும் வழங்கப்படுகின்றன.
- ஆஸ்திரேலியா: வீடுகள் கட்டப்படும்போது மழைநீரைச் சேமிப்பதற்கான தொட்டிகள் வழக்கமாக அமைக்கப்படுகின்றன.
- சிங்கப்பூர்: நாட்டின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் இரண்டு பங்கு பரப்பில் மழைநீர் சேகரிக்கப்பட்டு சேமிக்கப்படுகிறது.

(vi) பரிந்துரைக்கப்படும் நடவடிக்கைத் திட்டம்

- நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதற்காக வீடுகள், வணிக வளாகங்கள் மற்றும் அரசு கட்டடங்கள் அனைத்திலும் மழைநீர் சேகரிப்பு முறையைத் தீவிரமாகவும் கட்டாயமாகவும் செயல்படுத்த வேண்டும்.

- கைவிடப்பட்ட பொதுக் கிராமக் கிணறுகளில் உள்ள வண்டல் மண்ணையும் கழிவுகளையும் அகற்றி, அவற்றைச் சீரமைத்து மழைநீர் நிலத்தடி நீராகச் செறிவூட்டப்படும் கட்டமைப்புகளாக மாற்ற வேண்டும்.
- தமிழ்நாடு முழுவதும் ஏரிகள் மற்றும் குளங்களிலிருந்து உபரி நீரைக் கொண்டு செல்லும் கால்வாய்களில் உள்ள வண்டல் மண்ணை உடனடியாக அகற்ற வேண்டும். இதன் மூலம் வடகிழக்குப் பருவமழையின்போது கிடைக்கும் நீரைத் திறம்படச் சேமித்து பயன்படுத்த முடியும்.